சுருக்கம்

திட்டங்கள் - மாநில திட்டம் - நமக்கு நாமே திட்டம் (NNT) - 2023-2024-ஆம் ஆண்டில் நமக்கு நாமே திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ரூ.100 கோடிக்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி விடுவிப்பு செய்து வழிகாட்டு நெறிமுறைகளுடன் ஆணை வெளியிடப்பட்டது - அதனைத் தொடர்ந்து கூடுதலாக ரூ.50.00 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு மற்றும் விடுவிப்பு செய்தல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி-1) துறை

அரசாணை (நிலை) எண்.55

நாள்: 12 .03.2024
சோபகிருது, மாசி 29–ந்தேதி
திருவள்ளுவர் ஆண்டு 2055
படிக்கப்பட்டவை:

(1) அரசாணை (நிலை) எண்.87, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(மாஅதி-1) துறை, நாள் 23.06.2023.

(2) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் செயல்முறை ஆணைகள் ந.க.எண்.15864/2023/சிடிஎஸ்-4, நாள். 28.08.2023, 9.10.2023 மற்றும் 12.10.2023.

(3) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் எண்.15864/2023/சிடிஎஸ்-2, நாள். 06.11.2023.

----------

ஆணை:

மேலே படிக்கப்பட்ட அரசாணையில், நமக்கு நாமே திட்டத்தை (NNT) 2023-24-ஆம் ஆண்டில் செயல்படுத்த ரூ.100 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி விடுவிப்பு செய்து விரிவான வழிகாட்டு நெறிமுறைகளுடன் ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், 2023-24-ஆம் ஆண்டு நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.100.00 கோடியில் அனைத்து மாவட்டங்களுக்கும் உத்தேச ஒதுக்கீடாக (74%) ரூ.74.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார். மேலும், 28.08.2023

(த.பி.பா)

நாளிட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்கக செயல்முறை ஆணைகளின்படி, 25% சிறப்பு ஒதுக்கீட்டிலிருந்து திண்டுக்கல், நீலகிரி, சேலம், திருச்சி, தென்காசி, தஞ்சாவூர், இராமநாதபுரம், கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி மற்றும் சிவகங்கை மாவட்டங்களுக்கு (10 மாவட்டங்கள்) கூடுதல் நிதியாக ரூ.24.98 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும், 9.10.2023 மற்றும் 12.10.2023 நாளிட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்கக செயல்முறை ஆணைகளின்படி, செங்கல்பட்டு மற்றும் சிவகங்கை மாவட்டங்களுக்கு 2020-21, 2021-22 மற்றும் 2022-23 சேமிப்பு நிதியை கருத்திற்கொண்டு ரூ.4.71 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும், அதன்படி இதுவரை ரூ.103.69 கோடி மதிப்பிலான பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

3. மேலும், மாவட்டங்களிலிருந்து வரப்பெற்ற முன்மொழிவுகளின் அடிப்படையில், நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பணிகளை மேற்கொள்வதற்காக மாவட்டங்களிலிருந்து ரூ.100 கோடி கூடுதல் நிதி கோரி முன்மொழிவுகள் வரப்பெற்றுள்ளன எனவும், அவற்றில் ரூ.76.01 கோடி மதிப்பிலான பணிகளுக்கு அதற்குரிய பொது மக்கள் பங்குத்தொகை முழுமையாக பெறப்பட்டுள்ளன எனவும், எஞ்சியுள்ள பணிகளுக்கு அரசின் கூடுதல் நிதியை எதிர்நோக்கி பொது மக்கள் பங்குத் தொகை பெறப்பட்டு வருகின்றன எனவும் தெரிவித்துள்ளார்.

4. எனவே, நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பணிகளை மேற்கொள்ள கூடுதல் நிதி கோரும் முன்மொழிவுகள் மாவட்டங்களிலிருந்து தொடர்ந்து பெறப்பட்டு வருவதால், ஊரகப் பகுதிகளில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பணிகளை மேற்கொள்வதற்கு 2023-24-ஆம் ஆண்டிற்கு கூடுதலாக அரசு பங்களிப்பு தொகையாக ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு வழங்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலனை செய்து அதனை ஏற்று கொள்வதென முடிவு செய்து அதன்படி, 2023-2024-ஆம் ஆண்டு நமக்கு நாமே திட்டத்தை செயல்படுத்துவதற்காக விடுவிக்கப்பட்ட தொகை ரூ.100.00 கோடியைத் தொடர்ந்து, மேலும் இத்திட்டத்தை செயல்படுத்தும் பொருட்டு கூடுதலாக ரூ.50,00,00,000/- (ரூபாய் ஐம்பது கோடி மட்டும்)-க்கு நிதி ஒப்பளிப்பு மற்றும் விடுவிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படும்:-

"2515 - 00 - ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் - 102 - சமுதாய மேம்பாடு - மாநிலச் செலவினங்கள் - AU. "நமக்கு நாமே" திட்டத்தை செயல்படுத்தல் - 309 - உதவித் தொகை - 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை."

[த.தொ.கு. 2515 00 102 AU30903]

7. மேலே பத்தி 5-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையை பெற்று மாவட்டங்களுக்கு விடுவிக்க (சென்னை நீங்கலாக) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு அதிகாரம் அளித்து ஆணையிடப்படுகிறது. மேலும், நமக்கு நாமே திட்டத்தினை 2023-2024-ஆம் ஆண்டில் செயல்படுத்துவது தொடர்பான முன்னேற்ற அறிக்கையை அரசுக்கு அனுப்புமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. இந்த ஆணை நிதித் துறையின் இ-கோப்பு அ.சா. எண்.6461/JS(RR)/2023, நாள் 11.03.2024-ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ப. செந்தில்குமார்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை-15.

அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சென்னை நீங்கலாக),
(வழி: ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை-15).

அனைத்து திட்ட இயக்குநர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள்,
(வழி :ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை-15 வாயிலாக).

ஆணையர், கருவூலக் கணக்கு, சென்னை-35.

மாநில தலைமை கணக்காயர், சென்னை-9/18/35.

சம்பள கணக்கு அலுவலர் (தலைமைச் செயலகம்) சென்னை-9.

சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு/வடக்கு/தெற்கு), சென்னை-8/1/35.

சம்பள கணக்கு அலுவலர், மதுரை.

அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.

தேசிய தகவல் மையம், சென்னை-9.

**<u>நகல்</u>**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.

மாண்புமிகு அமைச்சர்(ஊரக வளர்ச்சி) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.

தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை-9.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர், சென்னை-9.

நிதித் துறை முதன்மைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர், சென்னை-9.

நிதி(வரவு-செலவு-I/வரவு-செலவு-II/ஊ.வ) துறை, சென்னை-9.

இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

12-3-2024

பிரிவு அலுவலர்

12/3